காரைக்கால்

## செய்திகுறிப்பு

காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து மூலம் நாட்டின் 69வது குடியரசு தின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கோட்டுச்சேரி நெடுங்காடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. சந்திரபிரியங்கா அவர்கள் தேசிய கொடி ஏற்றிவைத்து சிறப்புரை ஆற்றினார்கள். இக்குடியரசு தின விழாவை முன்னிட்டு சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. இவ்விழாவில் முன்னாள் கவுன்சிலர்கள், கிராம பஞ்சாயத்து தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்தார்கள். முன்னதாக விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் N. செல்வம் வரவேற்று பேசினார். இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை அலுவலக ஊழியர்கள் அனைவரும் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

26/1/18

COMMISSIONER
Commune Panchayat
Kottucherry